1986 ஏப்ரல் 28] [திரு. என். எஸ். வி. சித்தன்]

பின்னாலே நிறுத்தப்பட்டு, இப்பொழுது மறுபடியும் தொடங்கியிருக்கிறது. ஆனால் அந்தத் திட்டத்திற்கான முழுமை செலவையும் அரசே ஏற்றுக்கொண்டு, கிராமப் பகுதியிலே வாழ்கின்றவர்கள், ஓலைக் குடிசையிலே வாழ்கின்றவர்கள்— ஆடு மாடுகள் என்று வாழ்கின்ற இடத்தில் என்று சொல்வது அவர்களைக் குறைத்து மதிப்பிடுவதாக இருக்கும்— மிகவும் வறிய சூழ்நிலையிலே இருக்கிறவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் ஒரு சாவடி இருக்குமானால், வெயில் காலங்களில், மழைக் காலங்களில் அவர்களுக்குத் துணையாக இருக்கும், பொதுப் பிரச்னையிலே துணையாக இருக்கும். அந்த முறையிலே அதற்காக நிதி உதவியை அதிகமாகக் கொடுக்கவேண்டும். தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் என்று சொல்லக்கூடிய என். ஆர். இ.பி. திட்டத்தின் கீழ் பாதியும், மிகுதியைப் பஞ்சாயத்துக்களும் போடுகிற முறையிலே, இந்தக் கொள்கைக் குறிப்பிலே நான் பார்க்கிறேன். முழுமையாக அரசாங்கம் கொடுத்து, அந்த மாதிரி சாவடிகள் கட்டுகிற திட்டத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. **நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலம் கடந்து விட்டதன் காரணமாகவும், இப்பொழுது நான் பேசத் தொடங்கினால் 1 மணி நேரமாவது வேண்டுமென்ற காரணத்தினாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் தாங்க மாட்டார்கள் என்ற காரணத்தினாலும், பசி வந்து விட்டதன் காரணமாகவும், என்னுடைய பதிலை நாளைக் காலை 9 மணியிலிருந்து 10 மணி வரை வைத்துக்கொள்ளலாம் என்றும் எனவே, நாளைக் காலை கேள்வி நேரத்தை மாற்றிவிட்டு 9 மணியிலிருந்து 10 மணி வரை பதில் உரையை வைத்துக்கொள்ளலாம் என்றும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்.

விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. **நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெறவேண்டும் என்றுள்ள தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (29—4—1986) தளர்த்த வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (29-4-1986) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-04 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

70. கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பயணிகள் பேருந்துகளுக்கு 23—3—1986 முதல் 1—4—1986 முடிய உள்ள காலத்திற்குச் செலுத்தக் கூடிய வரியினின்று விலக்களிப்பது குறித்து உள் துறையின் 7—3—1986 ஆம் நாளிட்ட 582 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

71. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சாராய (சில்லறை விற்பனை கடைகள்) விதிகளை வகுப்பதுகுறித்து மதுவிலக்கு— ஆயத்தீர்வை துறையின் 18—6—1985 ஆம் நாளிட்ட 593 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட [அறிவிக்கை தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

147. கோரிக்கை எண் 1—நிலவரித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

148. வருவாய்த்துறையின் 1986–87 ஆம் ஆண்டிற்கான சாதனை அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

149. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் வனம் மற்றும் மீனளத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை (தமிழ் ஆங்கிலம்).

150. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) போக்குவரத்துத்துறை பற்றிய பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).